

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 32 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும், 78 பருவகால பணியாளர்களுக்கு பணி நிரந்தர ஆணைகளையும், என மொத்தம் 110 நபர்களுக்கு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த.மோகன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இணைச் செயலாளர் அமர் குஷ்வாஹா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதி திருவலம் பேரூர் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பேரூர் கழக செயலாளர் நேரு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் துரைசிங்காரம், ஒன்றிய கழக, பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

### ‘ஒரே நாடு – ஒரே தேர்தல்’ என்ற முழக்கத்தைத் தடுத்து நிறுத்தும்

# ஆற்றலும் சக்தியும் மாநில சுயாட்சிக்கே உண்டு!

இந்திய அரசியல் சூழ்நிலைகளையும், மாற்றங்களையும் ஒன்றிய அரசின் செயல்திட்டங்களையும், கூர்மையாகக் கவனித்து, ஆய்வுசெய்து 17.09.2024 ம் நாள் முப்பெருவிழாவில் நிறைவுரையாற்றிய முதல்வர், மக்களுக்கான மாநில உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்துவேன் என்பதை வலியுறுத்தினார். அரசியல் சட்டம் இன்று வழங்கியிருக்கின்ற அதிகாரங்களைச் சரியாகவும், முறையாகவும் செயல்படுத்தி, இந்திய ஒன்றியத்தில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கியிருக்கிறோம். இனி மாநிலசுயாட்சியின் மூலம், மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்விற்கும், வளர்ச்சிக்குமான, அதிகாரங்கள் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படுமானால், தமிழ்நாட்டின் வளர்ச்சியின் எல்லையை வரலாற்றுச் சாதனையாக மாற்றுவோம் என உறுதிபடத் தெரிவித்தார்.

ஏற்கனவே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக மாநிலசுயாட்சியை ஆக்கப்பூர்வமாகச் செயல்படுத்த நீதிபதி ராஜமன்னார் தலைமையில் குழு அமைத்தார். அந்தக் குழு வழங்கிய அறிக்கையின் அடிப்படையில், முரசொலி மாறன் தலைமையிலான குழு அதற்கான அரசியல் வடிவம் கொடுத்ததென்பது கடந்தகால வரலாறு. ஒவ்வொரு மாநிலத்திலும், அந்த மாநிலத்திற்கான தனித்த பிரச்சினைகள் இருப்பதை யாராலும் மறுக்கவியலாது, காரணம் இந்தியா, என்பது பன்முகத்தன்மை கொண்டது. எனவே இயற்கையாகவும், இயல்பாகவும் ஆங்காங்கு வாழும் மக்களின் தேவைகள் வேறுபடும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதுமட்டுமல்ல ஜனநாயகத்தில், பல அரசியல் கட்சிகள், தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தாங்கள் ஏற்றுக் கொண்ட சித்தாந்த அடிப்படையில், தேவைகள் வேறுபடும்! என்பது இயல்பானதாகும்! இத்தகையபன்முகத்தன்மையை உறுதிப்படுத்தும் நிலையில்தான் மறைந்த பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய நாட்டின் ஒற்றுமை (Integretion) வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்று குறிப்பிட்டார். இந்த அடிப்படை உண்மையை எக்காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், எந்தச் சட்டத்தாலும், மாற்றியமைத்திடவியலாது. ஆனால், மத்தியில் மூன்றாவது முறையாக ஆட்சியமைத்துள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர், “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கத்தை முன்வைத்ததோடு, அதற்கென ஒரு குழுவினை முன்னாள் குடியரசுத் தலைவர் தலைமையில் அமைத்து, அதன் மூலம், ஓர் அறிக்கையினைப் பெற்று “ஒரே நாடு ஒரே தேர்தல்” திட்டத்தை அமல்படுத்தும் முறையில் தீவிரம் காட்டிவருகிறார்கள்.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு உறுப்பினர்

இந்தத் திட்டம், நடைமுறைச் சாத்தியமில்லை என பல்வேறு அரசியல் சட்ட விற்பனர்கள் கருத்து தெரிவித்தாலும், ஒன்றிய அரசு அதனுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளத் தயாராகவில்லை. ஒன்றிய அரசின் இந்த முரட்டுப் பிடிவாதத்திற்கு என்ன காரணம்? இந்த “ஒரே நாடு ஒரே தேர்தல்” முழக்கத்திற்குப் பின்னால், வேறொரு மறைமுக அரசியல் நோக்கம் உள்ளது. தற்காலிகமாக இந்த மறைமுக நோக்கம் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற திரை மூலம் மறைக்கப்பட்டுள்ளது. அந்தத் திரை விளக்கப்படுமானால், தற்பொழுது அரசியல் சட்டத்தின் (Constitution of India) அடிப்படையில் அமல்படுத்திவரும் ஆட்சிமுறைக்கு மாற்றாக ஜனாதிபதி ஆட்சிமுறை (ஒற்றை நிர்வாக அரசு அமைப்பு) அமலாக்கம் தலைதூக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இந்த மறைமுகத் திட்டத்தின் வெள்ளோட்டம்தான் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கமும், செயலாக்கமும் ஆகும். ஒன்றிய அரசின் கடந்த கால நிகழ்வுகளும், நிகழ்ச்சிகளும் இந்த உள்நோக்கத்தை உறுதிப்படுத்தும் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் அதற்கு சித்தாந்த ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கும் ராஷ்டிரிய சுயம்சேவக் சங்க் (RSS) இயக்கத்திற்கும் இன்றைய அரசியல் சட்டம் வரையறுத்து வழங்கியிருக்கும் அமைச்சரவை ஆட்சிமுறையில் (Cabinet system of government) நம்பிக்கையில்லாத அரசியல் அமைப்புகளாகும்.

எனவே, இந்த இயக்கங்கள் வலியுறுத்தும் ஆட்சிமுறையென்பது ஜனாதிபதி ஆட்சி முறைதான் (ஒற்றை நிர்வாக அரசு அமைப்பு) (Presidential form of government) இந்த ஆட்சிமுறைக்கு இந்திய அரசியல் சட்டத்தில் வழியும், வாய்ப்பும் இல்லாமையால் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கத்தை முன்வைத்து தாங்கள் விரும்பிய ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு (ஒற்றை நிர்வாக அரசு அமைப்பு) வழித்தடம் அமைக்கும், உள்நோக்கம் கொண்டுதான் இந்த முயற்சியென தீர்க்கமாக அனுமானிக்க முடிகிறது. இந்த முயற்சியின் மூலம் தங்களின் திட்டமான “இந்துத்துவா” கோட்பாட்டின் அடிப்படையிலான “இந்துராஷ்டிரத்தை” உருவாக்கிடவும் திட்டமிடுகிறார்கள்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த உள்நோக்கத்தை அறிந்துதான், சென்னை ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற முப்பெரும் விழா நிகழ்ச்சியில், கழகத் தலைவர், முதல்வர் அவர்கள், மாநிலங்களுக்கு அவசியப்படும் அதிகமான அதிகாரங்கள் தேவை என்பதை வலியுறுத்தும் மாநிலசுயாட்சிக் கோரிக்கையை, தன்னுடைய உரையில் முத்தாய்ப்பாக பெரிதும் வலியுறுத்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிந்து வடிவம் கொடுத்த மாநிலசுயாட்சியின் தேவையை, இந்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு மாநிலங்களும், பல்வேறு அரசியல் கட்சிகளும் உணரத் தொடங்கிவிட்டதை அறிய முடிகிறது. அதுமட்டுமல்ல இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு வலிமைசேர்த்து நிரந்தரமாக உறுதிப்படுத்தும் சக்தியும் ஆற்றலும் மாநிலசுயாட்சிக் கோட்பாட்டிற்குதான் உண்டு என்பதை இந்திய நாட்டு மக்கள் பெரிதும் உணர தொடங்கிவிட்டார்கள்.

எனவேதான் ஒன்றிய அரசு “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்கு தயாராகி, அதற்கான அரசியல் சட்ட திருத்தங்களுக்கும் தயாராகி வருகிறது என்பதை அறியமுடிகிறது. இந்த முழக்கமும், செயல்லாக்கமும் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு (ஒற்றை நிர்வாக அரசு அமைப்பு) அமைக்கும் அரசியல் வழித்தடம்தான் என்பதை தொலைநோக்கு சிந்தனையால் உணர்ந்த முதல்வர் திராவிட மாடல் ஆட்சியின் வெற்றி நாயகனுமான தளபதியார் சரியான தடுப்பு நடவடிக்கையாக மாநிலசுயாட்சிக் கோரிக்கையை முப்பெருவிழா நிகழ்ச்சி உரையில் உயர்த்திப் பிடித்துள்ளார்.

எப்படி திராவிட மாடல் ஆட்சி, இந்திய முழுமையும், வழிகாட்டும் அரசியல் நெறியாகப் பயன்படுகிறதோ, அதுபோன்றுதான் மாநிலசுயாட்சியும் இந்திய நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக அமைவதோடு, ஒன்றிய அரசால் அமல்படுத்தத் துடிக்கும் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற நடைமுறைக்கு ஒவ்வாத திட்டத்தை தகர்த்து கூட்டாட்சியின் அடித்தளமான மாநிலசுயாட்சி மலர்வதற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. காலத்தால், தாங்கள் சரியான காலகட்டத்தில் உயர்த்திப்பிடித்த மாநிலசுயாட்சி கோரிக்கையின் பயன்களை உணரும் அனைத்து மாநில அரசுகளும், மக்களும், தங்களை குன்றின்மேலிட்ட விளக்காய் போற்றிப் பாராட்டும் காலம் வெகுதொலைவில் இல்லையென்பது மட்டுமல்ல, இந்திய நாட்டு வரலாறு காலமெல்லாம் வாழ்த்தும்.

### 45வது ‘செஸ் ஒலிம்பியாட்’டில் இந்தியா தங்கம் வென்று சாதனை!

# வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்குப் பாராட்டுகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப்.24-

45-ஆவது ‘செஸ் ஒலிம்பியாட்’டில் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவிலும் இந்தியா தங்கம் வென்றுள்ளதையடுத்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், “வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்கு எனது பாராட்டுகள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**இந்தியா தொடர்ந்து உயர்கிறது, ஒளிர்கிறது!**

**சென்னையில் நாம் மிகச் சிறப்பாக நடத்திக் காட்டிய செஸ் ஒலிம்பியாடைத் தொடர்ந்து, தற்போதைய 45ஆவது செஸ் ஒலிம்பியாட், புதாபெஸ்த் 2024இல் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு என இரண்டிலும் தங்கம் வெல்லும் அளவுக்கு இந்திய அணி பயணித்துள்ளது!**

**தங்கள் எல்லைகளைத் தொடர்ந்து அகலப்படுத்தி, இடைவிடா அர்ப்பணிப்புடன் நமது செஸ் சாம்பியன்கள் உலக அரங்கில் நமது நாட்டுக்குப் பெருமை தேடித் தருவதைக் காண்பது நெஞ்சுக்கு இதமளிக்கிறது.**

**வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ள இந்திய அணிக்கு எனது பாராட்டுகள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கே.வி.குப்பம் பி.கே.புரம் ஊராட்சியில்

# ‘தமிழும் தமிழ்நாடும்’ கருத்தரங்கம்!

### முப்பெரும் விழாவையொட்டி நடைபெற்றது!

*கே.வி.குப்பம், செப். 24-*

*வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் பி.கே.புரம் ஊராட்சியில், முரசொலி தமிழ் மன்றம், இலக்கிய அணி, திராவிட நட்பு கழகம் ஆகிய இந்த அமைப்புகளின் கூட்டு முயற்சியால் 22.9.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் நடக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு நாளில், கழகம் பவள விழா முப்பெரும் விழா, அதை ஒட்டி, பேரறிஞர் அண்ணாவின் அடையாளம் “தமிழும் தமிழ்நாடும் எனும் தலைப்பில் கருத்தாக்க உரைவீச்சு நடைபெற்றது.*

*இந்நிகழ்விற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா.பரிமளம் தலைமை தாங்கினார்.*

*மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணைச் செயலாளர் சி. கோபி வரவேற்புரை ஆற்றினார். ஜி.இளங்கோ, வழக்கறிஞர் எஸ்.மோகன்ராஜ், கீ.ப.கருணாநிதி, ச.மணிகண்டன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ச.மோகன் (பி.கே.புரம் ஊராட்சி மன்றத்தலைவர்) துளிர் வீரா.குமரன், கா. சுரேஷ், பங்கடை கருணாகரன் ஆசிரியர் ஆர். இரவிச்சந்திரன் ஆகியோர் முன்னலை வகிக்க. மாவட்ட நட்பு கழக செயலாளர் சா.குமரன் அறிமுக உரையாற்றினார்.*

*இந்நிகழ்வில் மாநில திராவிட நட்பு கழக தலைவர் சிங்கராயர், ஆக்ஸிலியம் கல்லூரியின் தமிழ் உதவி பேராசிரியர் முனைவர் அ. இந்துமதி, மாநில திராவிட நட்பு கழக பொதுச்செயலாளர் முகமது அசன் ஆகியோர் பேசினர். சிறப்பு அழைப்பாளர்களாக, கே.வி.குப்பம் மேற்கு, கிழக்கு, ஒன்றிய கழக செயலாளர்களான, கே.சீதாராமன், இரா.முருகேசன் ஆகியோர் வருகை புரிந்து சிறப்பித்தனர். தலைமை செயற்குழு உறுப்பினர் வி.கே.ஆர்.சுந்தரவடிவேலு, பொதுக்குழு உறுப்பினர் கே.தயாளமூர்த்தி மற்றும்*

*எம்.அசோக்குமார், இரா.தாமோதரன், பாரதி வெங்கடேன், கவிதா சுதா சேகர், அ. ஏழ்மைநாதன், வழக்கறிஞர் ஜி. விஜயக்குமார், கவுன்சிலர் விஜய லட்சுமி முருகன், முடினாம் பட்டு கு.குப்பன், சி.மார்க்கபந்து, மருத்துவர் கோவி. தூயவன், பா.சிவகாமி, இராதிகா, எம்.முரளி.*

*தா.மேகநாதன், ஜெ. விவேகானந்தன், ஆர். சத்யா, காவனூர் சிவக்குமார், சி. ரமேஷ்,கரு. சிரிதர், மு.பிரபு, சுடர் வெங்கடேசன், திருஞானம் எஸ்.என். சாமுவேல், நாகல் நாகராணி மற்றும் கழக தோழர்கள் மகளிரென பலர் கலந்து கொண்டனர்.*

*ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் ப.விஜய் நன்றி கூறினார்.*

## திருச்செங்கோடு அ.தி.மு.க.வினர்

### கழகத்தில் இணைந்தனர்!


நாமக்கல், செப். 24–

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் திருச்செங்கோடு அ.தி.மு.க. (ஓ.பி.எஸ். அணி) தெற்கு ஒன்றியச் செயலாளர் ஈஸ்வரமூர்த்தி மற்றும் அ.ம.மு.க.வைச் சேர்ந்த திருச்செங்கோடு தெற்கு ஒன்றியச் செயலாளர் முருகேசன், வடக்கு ஒன்றியச் செயலாளர் பிரபு ஆகியோர் தலைமையில் 14 பெண்கள் உட்பட 112 பேர் திருச்செங்கோடு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வட்டூர் தங்கவேல் ஏற்பாட்டில் தி.மு.க.வில் இணைந்தனர்.

புதிதாக தி.மு.க.வில் இணைந்தவர்களை வரவேற்று சால்வை அணிவித்து மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் வாழ்த்துத் தெரிவித்தார். திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் பொது மக்களிடம் கொண்டு சேர்த்து, கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில், தீவிர களப் பணி ஆற்ற வேண்டும் எனவும் கழகத்தில் இணைந்தவர்களிடம் மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கேட்டுக்கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**டி.கே. பழனிச்சாமி**
**செப்டம்பர் 24 (2000)**



**திருவொற்றியூர் நகரக் கழகச் செயலாளராகவும், நகராட்சி மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்.**

**‘கழகத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஓடியாடி உழைத்த உடன்பிறப்பு’ என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**